**மாற்றுவழி:**

- நாடக எழுத்துருவைப் பொறுத்து, ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு காட்சி ஒதுக்கப்படுகிறது. நிறைவாக, பல்வேறு காட்சிகளும் தொடரில் ஒன்றாக இணைக்கப்பட்டு ஓர் ஒத்திசைவுள்ள அரங்கநாடகமாக அளிக்கை செய்யப்படுகின்றது.
- கற்பனை நடிப்புக்கும் எழுத்துருக்களை நாடகமாக்கலுக்கும் மேல்நிலை projector ஊடாக அல்லது நிழல் நாடகம் (விரற் பாவைகள்) ஆகியனவும் பொருத்தமாக அமையும்.

**குறிப்புகள்:**

- பயிற்சியைக் கொடுப்பதற்கு முன்னர் மாணவர்களுக்கு வேண்டிய சொற்களஞ்சியத்தினை வழங்குதற்கு இன்றியமையாத மொழி வழிமுறைகள் பலகையில் எழுதப்பட்டுக் கலந்துரையாடப்படும்.
- நாடக எழுத்துருவைப் பொறுத்து, கதாப்பாத்திரங்களுக்கு மேலாக, ஒரு மாணவர் கதைசொல்லும் வகிபாகத்தினை ஏற்கவேண்டும்.
- நடிகர்கள் ஒரு பெரிய அவையை நோக்கிப் பேசுவர். ஆகவே, இப் பயிற்சியில் தெளிவான ஒலிப்பின் இன்றியமையாமையினை மாணவர்களுக்கு சிறப்பாக அழுத்திக் கூறப்படவேண்டும். அளிக்கையின்போது கருத்தில் கொள்ளப்படும். வழிகாட்டு விதிகளுள் இதுவும் ஒன்று என்பதில் ஐயமில்லை.

# 28 பள்ளி நாடக அரங்கு

**இலக்கு**

*பள்ளி நாடக அரங்கில் ஆற்றுகை செய்தல் தன்விளக்கம், கட்டற்ற ஆற்றுகை, சைகைகளைப் பயன்படுத்தல், போலச் செய்தல், அரங்க மற்றும் விரிவாக்கம் பெற்ற மொழி ஆகியவற்றின் திறன்களை வலுவடையச்செய்கின்றது. அத்துடன் ஒருவரின் முதல்மொழியில் சொல் மற்றும் தொடர் திறனை விரிவாக்குகின்றது. பெறப்பட்ட தகைமைகள் (பார்க்கவும் #8, #27) இங்கு ஒன்றாகி பெரிய மேடையேற்றங்களின் ஊக்குவிப்புக் கட்டமைப்புக்குத் துணைசெய்கின்றன.*

தரம் 2 - 9

180 மணித்துளிகள்

**கருவிகள்:**
தூண்டிகள்

**நடைமுறை:**

- நாடகத்துக்கான ஓர் எழுத்துரு மாணவர்களுடன் சேர்ந்து எழுதப்படுகிறது, அல்லது ஏற்கெனவேயுள்ள கதையைத் தழுவி அரங்குக்கான உரையாடல் எழுத்துரு ஆக்கப்படுகிறது (இரண்டு மாற்றுகளும் எழுத்துப்பயிற்சிக்கு மிகப் பயனுடையன). ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டு இருந்துவரும் வார்ப்பு ஒன்றினை மேடையேற்றலாம்.
- தொடர்ந்து தனிக் காட்சிகள் ஒத்திகை பார்க்கப்படும். இது ஒலிப்புப் பயிற்சிகள் மற்றும் உடல் மொழி, முகபாவம், சைகைகள் ஆகியவற்றை உள்ளடக்குகிறது, அவை கலந்துரையாடப்பட்டுச் செய்துபார்க்கப்படும்.
- துணைப் பொருட்கள் ஒழுங்கு செய்யப்பட்டு அளிக்கை திட்டமிடப்படுகிறது (ஓர் அறை, நிகழ்ச்சிகள், அழைப்புகள், சிற்றுண்டி, முதலியன).

III



- காட்சிகள் ஒவ்வொன்றாக ஒத்திகை பார்க்கப்படுகின்றன, இதனால் மாணவர்கள் தன்னம்பிக்கை பெறுகின்றனர், ஆசிரியர் படிப்படியாக விலகலாம்.
- இக்கற்கைச் செயன்முறையில் இன்றியமையாதது என்னவெனில் முன்னர் உருவாக்கப்பட்ட வழிகாட்டி விதியை மற்றும் பொருத்தமான கண்காணிப்புக் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு மாணவர்கள் மீண்டும் மீண்டும் ஒருவருக்கொருவர் பின்னூட்டல் வழங்குவதாகும்.
- காட்சிகள் சிறிது சிறிதாக தொடர்ச்சியாக்கி பின்னர் மேடையேற்ற, நிறைவில் முழுமைப்படுத்தப்பட்ட நாடகம் உருவாகிறது.
- மேடையேற்றுதல் ஒரு பொருத்தமான கட்டமைப்புக்குள் நடக்க வேண்டும், எ.கா.: ஒரு பெற்றோர் மாலைநிகழ்வில் அழைப்புகள், நிகழ்ச்சிகள், சிற்றுண்டிகள் ஆகியவற்றுடன் மேடையேற்றுதல்.

---

**குறிப்புகள்:**

- ஒரு பா.மொ.க வகுப்பு பல அகவைக் குழுவினர்களை உடையதாயிருப்பின், ஒவ்வொரு குழுவினரும் ஒவ்வொரு நாடகத்தைப் பயிற்சி செய்வர், இதனால் நிறைவு நிகழ்வில், எடுத்துக்காட்டாக மூன்று சிறு துண்டுகள் அல்லது வடிவங்கள் ஆற்றுகை செய்யப்படும்.
- மாணவர்களை மேடையிலே நடிப்பதற்கும் அளிக்கைசெய்தற்கும் பழக்குதற்கு, முதலில் சிறு துண்டுகளுடன் தொடங்கி, பின்னர் படிப்படியாக எதிர்பார்ப்புகளை உயர்த்தலாம்.